**செய்தி வெளியீடு:1032** **26.11.2008**

## தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பான ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டம்.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உயர்மட்ட அதிகாரிகளுடன் இன்று (26.11.2008) தலைமைச் செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

❖ தமிழகத்தில் 15.10.2008 அன்று வடகிழக்கு பருவமழை தொடங்கியதாக சென்னை வானிலை மையம் அறிவித்தது. 15.10.2008 அன்று முதல் 26.10.2008 வரை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.

❖ 15.10.2008 முதல் இன்று வரை மாநிலத்தில் 64 மனித உயிரிழப்புகளும், 121 கால்நடை இறப்புகளும் ஏற்பட்டுள்ளன. 3089 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

❖ வடகிழக்கு பருவமழையால் உயிரிழந்த 64 நபர்களில், 42 நபர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டு விட்டது. இறந்த கால்நடைகளில், 97 இனங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 3009 குடிசைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

❖ வடகிழக்கு பருவமழைக் காலத்தில் இயல்பாக பெய்ய வேண்டிய மழை அளவே **(Normal Rains)** பதிவாகியுள்ளது.

❖ 17.11.2008 அன்று வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக 19.11.2008 முதல் விட்டு விட்டு அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. குறிப்பாக கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், கடலூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

❖ 19.11.2008 முதல் இன்று வரை பெய்த மழைக்கு 22 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 48 கால்நடைகள் இறந்துள்ளன. 216 குடிசைகள் முழுமையாகவும், 454 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

❖ இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு **பேரிடர் நிவாரண நிதி வழிகாட்டு நெறிமுறைகளின்படி** (CRF Norms)

இறந்தவர்களின் குடும்பத்தினர்க்கு **ரூ. 1 இலட்சமும்,** இறந்த எருமை, பசு, எருது போன்றவற்றிற்கு தலா **ரூ.10,000/–** வீதமும் இறந்த ஆடுகளுக்கு தலா **ரூ.1,000/–** வீதமும் நிவாரணமாக வழங்கப்படுகிறது. பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா **ரூ.2000/–** வீதமும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

- ❖ பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.
- ❖ மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி, 45 வட்டங்கள், 324 வருவாய் கிராமங்கள், 64,531 எண்ணிக்கையிலான மக்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையினால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 3028 நபர்கள் அப்பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதுவரை 17 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு அதில் 1681 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 20700 உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.
- ❖ டெல்டா மாவட்டங்களில் சுமார் 50,000 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், தண்ணீர் வடிந்தவுடன் சரியான சேத மதிப்பு குறித்து தெரிய வரும் என்றும் அம்மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை செய்துள்ளனர்.
- ❖ தொடர் மழை காரணமாக, மாநிலத்திலுள்ள பெரும்பாலான அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.
- ❖ டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணையிலிருந்து நீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.
- ❖ மழையால் பெரும் சேதங்கள் ஏற்படாவண்ணம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இன்னும் ஒரு சில மணி நேரங்களில் கரையைக் கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் வெள்ள நிவாரண பணிகளை மேற்பார்வையிட மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை நியமித்துள்ளார்கள். அதன்படி திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், டாக்டர். ஜே. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் செல்வி. லீனா நாயர், இ.ஆ.ப., நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும், திரு. சுர்ஜித் கே. சௌத்ரி, இ.ஆ.ப., கடலூர் மாவட்டத்திற்கும், விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., திருவாரூர் மாவட்டத்திற்கும் மேற்பார்வை அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வடகிழக்கு பருவமழையினால் உயிர் சேதம் மற்றும் கால்நடை சேதங்கள் மற்றும் பொருள்கள் சேதம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நிவாரணத் தொகைக்காக தமிழக அரசின் சார்பில் இதுவரை 23 கோடியே 34 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் (பொறுப்பு), வருவாய்த் துறை அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலர், நெடுஞ்சாலைத்துறை அரச முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், நல்வாழ்த்துறை முதன்மைச் செயலர், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர காவல்துறை ஆணையர், கூடுதல் காவல்துறை ஆணையர் (போக்குவரத்து) , இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**************************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**